உ

“உனக்கு நீயே உண்மையாய் இரு”

# யா/காரைநகர் இந்துக் கல்லூரி

# பழைய மாணவர் சங்கம் - கனடா

## செயற்பாட்டு அறிக்கை (ஜனவரி 2019 - டிசம்பர் 2021)

அன்பார்ந்த உறுப்பினர்கள், அனுசரணையாளர்கள், நலன் விரும்பிகள், அனைவருக்கும் அன்பு கலந்த வணக்கம்.

எமது சங்கம் உருவாக்கம் பெற்ற பத்து ஆண்டுகளை எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் நிறைவு செய்வதற்கு காத்திருக்கின்ற சங்க வரலாற்றின் முக்கியமான காலகட்டத்தில் 2019, 2020, 2021 ஆகிய மூன்று ஆண்டுகளின் செயற்பாட்டு அறிக்கையினையினை சமர்ப்பிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

2020, 2021, ஆகிய காலப் பகுதிகளில் கொரோனாத் தொற்றின் பேரிடர் நிலவி வந்தபோதிலும் அதனையும் தாண்டி உங்கள் அனைவரதும் பேராதரவுடன் கல்லூரியின் அடிப்படைத் தேவைகளிற்கான உதவிகளை மட்டுமல்லாது மாணவர்கள், ஆசிரியர்கள், ஆகியோருக்கான ஊக்குவிப்பு உதவிகளையும் வழக்கம்போல வழங்க முடிந்தமை குறித்து மகிழ்ச்சியும் மனநிறைவும் அடைகின்றோம்.

**ஜனவரி 2019 தொடக்கம் டிசம்பர் 2021 முடிய உள்ள மூன்று ஆண்டு காலப்பகுதியில் எமது சங்கத்தினால் கல்லூரிக்கான உதவியாக நாற்பத்து மூன்று இலட்சத்து தொளாயிரத்து ஐம்பத்து மூன்று ரூபாவினை (43,36,953.00 ரூபா) வழங்க முடிந்துள்ளமையானது எமது உறுப்பினர்களும் அனுசரணையாளர்களும் நலன் விரும்பிகளும் கல்லூ ரியின் வளர்ச்சியில் கொண்டுள்ள ஆழ்ந்த கரிசனையினையும் எமது சங்கத்தின் செயற்பாட்டில் அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கைத் தன்மையினையும் எமது சங்கத்தின் வினைத்திறன் மிக்க செயற்பாட்டினையும் வெளிப்படுத்துவதாகவுள்ளது.**

**கல்லூரியின் அடிப்படைத் தேவைகளிற்கு உதவும் வகையில் இருபது இலட்சம் ரூபாவினை நிரந்தர வைப்பிலிட்டும், க.பொ.த.சாதாரண தர மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர் அமரர் சி.குமாரவேலு ஞாபகார்த்தமாக அன்னாரது மாணவனும் எமது முதன்மை அனுசரணையாளர்களுள் ஒருவருமாகிய தொழிலதிபர் திரு. மகாதேவன் பாலசுப்பிரமணியம் அவர்களினால் ஐந்து இலட்சம் ரூபா நிரந்தர வைப்பிலிட்டும் இரண்டு முக்கியமான உதவித்திட்டங்கள் இக்காலப்பகுதியில் தொடக்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.**

**2019ஆம் ஆண்டில் எம்மால் முன்னெடுக்கப்பட்ட பணிகளும் கல்லூரிக்கான உதவிகளும்:**

ஆசிரியர் தினக் கொண்டாட்டத்தின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு ஏழாவது ஆண்டாகவும் இதற்கு 34,025.00ரூபா உதவப்பட்டிருந்தது. இக்கொண்டாட்டத்தின்போது ஆசிரியர்களிற்கு நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் மதிய போசன விருந்தும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டிருந்தனர்.

க.பொ.த.(சாதாரணம்) பரீட்சையிலும் க.பொ.த.(உயர்தரம்)ப் பரீட்சையிலும் சிறப்புச் சித்திகளைப் பெற்ற மாணவர்களிற்கு ஊக்கிவிப்புப் பரிசில்கள் வழங்க 40,9000.00 ரூபா உதவப்பட்டிருந்தது. க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சிறப்புச் சித்திபெற்ற மாணவர்களைப் பாராட்டி ஊக்குவிப்புப் பரிசில்கள் வழங்கியிருந்த நிகழ்வில் எமது சங்கத்தின் முதன்மை அனுசரணையாளர்களில் ஒருவரான தொழிலதிபர் திரு.மகாதேவன் பாலசுப்பிரமணியம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டிருந்தமை சிறப்பானதாகும்.

**நினைவுப் பரிசில்கள் வழங்கியமைக்கான உதவி**

கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவின்போது வழமைபோல தமது அன்பிற்குரியவர்களின் நினைவாக நினைவுப் பரிசில்களை வழங்க உதவியோர் விபரம்:

எமது சங்கத்தின் ஆரம்பகர்த்தாக்களுள் ஒருவரும் ஆரம்பகாலத் தலைவருமாகிய **அமரர் சின்னத்தம்பி தம்பிராசா நினைவுப் பரிசில்** வழங்க அன்னாரது துணைவியாரான எமது உறுப்பினர் திருமதி மனோன்மணி தம்பிராசா அவர்களினால் ஆறாவது ஆண்டாக உதவப்பட்டது. இவ்வாண்டு உதவிய தொகை 20,000.00 ரூபாவாகும்.

காரைநகர் முதலிகேணியடியைச் சேர்ந்த **அமரர் சுப்பிரமணியம் சரஸ்வதி நினைவுப் பரிசில்** வழங்க அன்னாரது புதல்வன் திரு. சச்சிதானந்தன் மருமகள் திருமதி சுந்தரேஸ்வரி சச்சிதானந்தன் ஆகியோரினால் ஆறாவது ஆண்டாக உதவப்பட்டது. இவ்வாண்டு உதவிய தொகை 20,000.00 ரூபாவாகும்.

கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் **அமரர் நாகமுத்து கனகசுந்தரம் நினைவுப் பரிசில்** வழங்க அன்னாரது புதல்வன் கனக சிவகுமாரன் அவர்களினால் நான்காவதுவது ஆண்டாக உதவப்பட்டது. இவ்வாண்டு உதவிய தொகை 5000.00 ரூபாவாகும்.

தேசியமட்ட விளையாட்டுப் போட்டியில் சாதனை படைத்து கல்லூரிக்குப் பெருமை சேர்த்த முதலாவது பழைய மாணவனும் காரைநகர் விளையாட்டுத்துறையின் முன்னோடியாக கருதப்படுபவருமான **அமரர் அப்பாக்குட்டி சுந்தரம்பிள்ளை நினைவுப் பரிசில்** வழங்க அன்னாரது பெறா மகன் மாணிக்கம் கனகசபாபதி அவர்களினால் நான்காவது ஆண்டாக உதவப்பட்டது. உதவிய தொகை 10,000.00 ரூபாவாகும்.

**சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டிருந்த விசேட திட்டத்திற்கு நிதி திரட்டும் நோக்கில் நடாத்தப்பட்டிருந்த இசை நிகழ்ச்சி**

அரச உதவிகள் கிடைக்கப் பெறாத கல்லூரியின் நடைமுறைச் செலவீனங்களிற்குத் தேவையான நிதியினைப் பெற்றுக்கொள்ளும் வகையில் நிரந்தர வைப்புத் திட்டம் ஒன்றினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நிதி திரட்டும் நோக்கில் “சுப்பர் சிங்கர்” சாயிசரண் அவர்களின் “இன்னிசை முழக்கம்” என்ற தொனிப் பொருளிலான இசை நிகழ்ச்சி கனடா கந்தசுவாமி கோயில் மண்டபத்தில் மே 19இல் வெற்றிகரமாக நடாத்தப்பட்டிருந்தது. கல்லூரியின் மகிமை மிக்க பழைய மாணவனாகிய புவி விஞ்ஞானியும் பொறியியலாளருமாகிய சிற்றம்பலம் திருஞானசம்பந்தன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நிகழ்வினைச் சிறப்பித்திருந்தார். இருபது இலட்சம் ரூபாவினைத் திரட்டுவது என்ற எமது இலக்கு இந்நிகழ்ச்சியினூடக வெற்றிகரமாக அடையப்பட்டிருந்தது.

அனுசரணை வழங்கி நிகழ்வின் வெற்றிக்கு ஆதரவளித்த குழந்தை மருத்துவ நிபுணர் மருத்துவகலாநிதி வி.விஜயரத்தினம், தொழிலதிபர் மகாதேவன் பாலசுப்பிரமணியம், பொறியியலாளர் சிற்றம்பலம் திருஞானசம்பந்தன் அவரது துணைவியார் திருமதி நிர்மலாதேவி திருஞானசம்பந்தன், மருத்துவகலாநிதி இராமலிங்கம் செல்வராசா அவரது துணைவியார் மருத்துவகலாநிதி திருமதி சரோ செல்வராசா, வீடு விற்பனை முகவர் திரு. ராஜ் நடராசா, வீடு விற்பனை முகவர் திரு.ரவி ரவீந்திரன், Siva Travels உரிமையாளர் (Switzerland) சிவா கனகசுந்தரம், வீடு விற்பனை முகவர் திரு.ஜெயக்குமார் நடராசா, Olympic Wood Work Inc. உரிமையாளர் திரு. கருணாகரன் பஞ்சலிங்கம், வீடு விற்பனை முகவர் திரு.கண்ணன் நடராஜா, karainews.com இணையத்தள சேவையின் தொகுப்பாளர் திரு.தீசன் திரவியநாதன், Kasippillai & Sons திரு.முருகேசு காசிப்பிள்ளை, Airport Limo திரு.திருவேங்கடம் சந்திரசோதி ஆகியோருக்கும் நிகழ்வினை முற்றிலும் இலவசமாக வீடியோ படம் எடுத்தும் புகைப்படங்கள் எடுத்தும் உதவி ஆதரவளித்த K.K.Electronics நிறுவன அதிபர் திரு.பொன்னம்பலம் குழந்தைவேலு அவர்களிற்கும் அவரது துணைவியார் திருமதி மலர் குழந்தைவேலு அவர்களிற்கும் நுழைவுச் சீட்டுக்களைப் பெற்று ஆதரவளித்த உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் பழைய மாணவர் சங்க கனடா கிளை மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றது.

மின் கட்டணம், Wi Fi இணையக் கட்டணம், தொலைபேசிக் கட்டணம், குடிநீர்க் கட்டணம் விருந்தினர் உபசரணை ஆகியவற்றின் கொடுப்பனவிற்கு உதவப்பட்டது. உதவிய தொகை 1,47,871.00ரூபாவாகும்.

கல்லூரியில் உருவாக்கப்பட்ட பெண்கள் கொக்கி அணியின் விசேட பயிற்றுனருக்கான கொடுப்பனவிற்கும், அணியில் இடம்பெற்றுள்ள மாணவிகளிற்கான காலணிகள் கொள்வனவிற்கும், சீருடைகள் கொள்வனவிற்கும் 88,300.00ரூபா உதவப்பட்டது.

நல்லூர் உற்சவத்தினை முன்னிட்டு யாழ்.தமிழ்ச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட “சைவம் தழைத்தோங்க” என்ற ஆன்மீக நிகழ்வில் கல்லூரி மாணவிகளின் பாராட்டினைப் பெற்ற கலை நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன. இந்நிகழ்வுகளிற்காக 28,500.00ரூபாவினை உதவி எமது சங்கம் அனுசரணையினை வழங்கியிருந்தது.

ஆங்கில தின விழாவில் வெளியிடப்பெற்று வருகின்ற BLOSSOM என்ற சஞ்சிகையின் வெளியீட்டிற்கு எமது சங்கமும் உதவி பங்களிப்புச் செய்திருந்தது. உதவிய தொகை 10,000.00ரூபாவாகும்.

க.பொ.த. உயர்தர வகுப்பில் கற்கும் வாழ்வாதார வசதி குறைந்த குடும்பத்தைச் சேர்ந்த மாணவி ஒருவருக்கு எமது சங்க உறுப்பினர் மா.கனகசபாபதி அவர்களினால் வழங்கப்பட்டு வந்த கற்றலுக்கான உதவியில் இவ்வாண்டுக்குரிய உதவியாக 14,000.00ரூபா உதவப்பட்டது.

கணினிஅலுவலக உதவியாளருக்கான மாதாந்தக் கொடுப்பனவு வழங்க உதவப்பட்டது.

கல்லூரியின் முன்னாள் அதிபரும் பழைய மாணவியுமாகிய திருமதி வாசுகி தவபாலன் கல்வி அமைச்சினால் சிறந்த அதிபராகத் தெரிவு செய்யப்பட்டு “குருபிரதீபா பிரபா” விருதினைப் பெற்றமைக்காக பாராட்டு விருது வழங்கப்பட்டது.

7வது ஆண்டுப் பொதுக் கூட்டம் கனடா கந்தசுவாமி கோயில் மண்டபத்தில் அதிக எண்ணிக்கையான உறுப்பினர்களின் சமூகத்துடன் சிறப்பாக நடைபெற்றது. ஆண்டறிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டதுடன் கல்லூரியின் வளர்ச்சி சார்ந்து பயனுள்ள கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன. எமது சங்கத்தின் தொடக்குனர்களுள் ஒருவரும் முன்னாள் தலைவரும் முன்னாள் போசகரும் சங்கத்துடன் நெருக்கமாகவிருந்து பல்லாற்றாலும் உதவி வருகின்றவருமாகிய திரு.மு.வேலாயுதபிள்ளை அவர்கள் முத்து விழா கண்டதையிட்டு இக்கூட்டத்தில் பொன்னாடை அணிவித்தும் பாராட்டுரை வழங்கியும் கௌரவிக்கப்பட்டிருந்தார்.

**நடைமுறைச் செலவீனங்களிற்கான உதவித் திட்டம் தொடங்கப் பெற்றமை.**

நடைமுறைச் செலவீனங்களிற்குத் தேவைப்படும் நிதியினை பெற்றுக் கொள்ளும் வகையிலான உதவித் திட்டம் 16இலட்சம் ரூபா தேசிய சேமிப்பு வங்கியில் நிரந்தர வைப்பில் இட்டு தொடக்கி வைக்கப்பட்டிருந்தமை இவ்வாண்டின் முக்கியமான பணியாகும்.

பிரபல வர்த்தகர் S.P.சுப்பிரமணியம் அவர்களின் நினைவாக எமது உறுப்பினரான அன்னாரது புதல்வன் திரு.அரிகரன் அவர்களால் பல்கலைக்கழகம் சென்ற பத்து மாணவர்களை கௌரவித்து ஊக்குவிப்புப் பரிசில்கள் வழங்குவதற்கு 62,100.00 ரூபா உதவி முழுமையான அனுசரணை வழங்கப்பட்டிருந்தது.

**karaihinducanada.com இணையத்தள சேவை**

இவ்விணையத்தளமானது மீள வடிவமைக்கப்பட்டு அனைத்து வகை அலைபேசிகளிலும் பார்வையிடக்கூடியவாறு மாற்றியமைக்கப்பட்டு புது வடிவம் பெற்றுள்ளது. கல்லூரி சார்ந்த செய்திகள், நிகழ்வுகள், சாதனைகள், கல்லூரியின் வரலாற்று ரீதியான பதிவுகள் என்பவற்றை வெளியிட்டு வருவது மட்டுமல்லாது கல்லூரிக்குப் பெருமை சேர்த்து வருகின்ற பழைய மாணவர்களது சாதனைகளையும் வெளிப்படுத்தி வருகின்றது. அத்துடன் கல்லூரி மற்றும் எமது சங்கம் தொடர்புபட்டவர்களது மறைவிற்கு அஞ்சலியினையும் அவர்களது மரண அறிவித்தல்களையும் பிரசுரித்து வருகின்றது. கல்லூரியின் புகழினை மேலோங்கச் செய்யும் பணியிலும் பழைய மாணவர்களை ஒன்றிணைக்கும் பணியிலும் இதன் பங்களிப்பு பாராட்டிற்குரியதாக விளங்குகின்றது.

**2020ஆம் ஆண்டில் எம்மால் முன்னெடுக்கப்பட்ட பணிகளும் கல்லூரிக்கான உதவிகளும்:**

நடைமுறைச் செலவீனங்களிற்கு உதவும் நிரந்தர வைப்புத் திட்டத்தில் மேலும் நான்கு இலட்சம் ரூபா சேர்க்கப்பட்டதன் ஊடாக நிரந்தர வைப்புத் தொகை இருபது இலட்சம் ரூபாவாக அதிகரித்தது.

மின் கட்டணம், இணையக் கட்டணம், தொலைபேசிக் கட்டணம், விருந்தினர் உபசரணை என்பவற்றிற்கு உதவப்பட்டது. உதவப்பட்டதொகை 79,374.00 ரூபாவாகும்.

அலுவலக உதவியாளருக்கான மாதாந்த வேதனம் வழங்க 70,000 ரூபா உதவப்பட்டது.

உயிரியல் பாட ஆசிரியர் இல்லாத நிலையில் தற்காலிகமாக பணிக்கமர்த்தப்பட்டிருந்த ஆசிரியருக்கான வேதனம் வழங்க உதவப்பட்டது. உதவப்பட்டதொகை 17,000.00 ரூபாவாகும்.

கோவிட் -2019 பேரிடர் காரணமாக நிதி சேகரிப்புச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலையில் எமது வேண்டுகோளை ஏற்று குழந்தை மருத்துவ நிபுணர் மருத்துவகலாநிதி வி.விஜயரத்தினம் அவர்கள் முன்வந்து 2500.00டொலர்களை உதவியிருந்ததன் மூலம் கல்லூரிக்கான உதவிகளை வழங்க முடிந்தது.

**2021ஆம் ஆண்டில் எம்மால் முன்னெடுக்கப்பட்ட பணிகளும் கல்லூரிக்கான உதவிகளும்:**

மின் கட்டணம், உபசரணை, தொலைபேசிக் கட்டணம் ஆகியனவற்றின் கொடுப்பனவிற்கு 86,599.00ரூபா உதவப்பட்டது.

அலுவலக உதவியாளருக்கான மாதாந்தக் கொடுப்பனவிற்கு 168,000.00ரூபா உதவப்பட்டது.

**நினைவுப் பரிசில்கள் வழங்கியமைக்கான உதவி**

கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவின் போது வழமை போல தமது அன்பிற்குரியவர்களின் நினைவாக நினைவுப் பரிசில்களை வழங்க உதவியோர் விபரம்:

எமது சங்கத்தின் ஆரம்பகர்த்தாக்களுள் ஒருவரும் ஆரம்பகாலத் தலைவருமாகிய **அமரர் சின்னத்தம்பி**

**தம்பிராசா நினைவுப் பரிசில்** வழங்க அன்னாரது துணைவியார் திருமதி மனோன்ண்மணி தம்பிராசா அவர்களினால் ஏழாவது ஆண்டாக உதவப்பட்டது. உதவப்பட்ட தொகை 30,000.00ரூபாவாகும்.

காரைநகர் முதலிகேணியடியைச் சேர்ந்த **அமரர் சுப்பிரமணியம் சரஸ்வதி நினைவுப் பரிசில்** வழங்க அன்னாரது புதல்வன் திரு. சச்சிதானந்தன் மருமகள் திருமதி சுந்தரேஸ்வரி சச்சிதானந்தன் ஆகியோரினால் ஏழாவது ஆண்டாக உதவப்பட்டது. உதவப்பட்ட தொகை 15,000.00 ரூபாவாகும்.

கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் **அமரர் நாகமுத்து கனகசுந்தரம் நினைவுப் பரிசில்** வழங்க அன்னாரது புதல்வன் கனக சிவகுமாரன் அவர்களினால் ஐந்தாவது ஆண்டாக உதவப்பட்டது. உதவப்பட்ட தொகை 5000.00 ரூபாவாகும்.

தேசியமட்ட விளையாட்டுப் போட்டியில் சாதனை படைத்து கல்லூரிக்கு பெருமை சேர்த்த முதலாவது பழைய மாணவரும் காரைநகர் விளையாட்டுத்துறையின் முன்னோடியாக கருதப்படுபவருமான **அமரர் அப்பாக்குட்டி சுந்தரம்பிள்ளை நினைவுப் பரிசில்** வழங்க அன்னாரது பெறா மகன் மாணிக்கம் கனகசபாபதி அவர்களினால் ஐந்தாவது ஆண்டாக உதவப்பட்டது. உதவப்பட்ட தொகை 10,000.00 ரூபாவாகும்.

பொறியியல் துறை, முகாமைத்துவத் துறை ஆகியவற்றிற்கு பல்கலைக்கழக அனுமதி கிடைத்த இரு மாணவிகளிற்கு மடிக் கணினிகள் உதவப்பட்டிருந்தன. இவற்றினை உதவுவதற்கு கல்லூரியின் பழைய மாணவனாகிய புவி விஞ்ஞானியும் பொறியியலாளருமாகிய சிற்றம்பலம் திருஞானசம்பந்தன் அவர்களும், எமது உறுப்பினரான (தலைவர்) திரு.நாகலிங்கம் குஞ்சிதபாதம் அவரது மகன் திரு.அரவிந்தன் ஆகியோரும் முழுமையான அனுசரணையினை வழங்கியிருந்தனர்.

எமது எதிர்காலச் சந்ததி தமிழ் மொழியினைக் கற்கவும் தமிழ்க் கலாசாரத்தைப் பேணவும் வாய்ப்பளிக்கும் வகையில் ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்தப்படவுள்ள வரலாற்றுப் பணியாகிய தமிழ் இருக்கைக்கு (Toronto Tamil Chair) 25 உறுப்பினர்கள் முன்வந்து உதவிய தொகை 10,615.00 டொலர்கள் கையளிக்கப்பட்டது.

ஓய்வுபெற்ற உப அதிபர் திரு.தெ.லிங்கேஸ்வரன் அவர்களிற்கு பாராட்டு விருதும் வெகுமதியும் வழங்கப்பட்டது. இதற்கான அனுசரணையினை பொருளாளர் மா.கனகசபாபதி அவர்கள் வழங்கியிருந்தார்.

தாய், தந்தையை இழந்த மாணவியின் கற்றலுக்கான உதவி எமது நிர்வாக உறுப்பினர் திரு.கனகரத்தினம் சிவபாதசுந்தரத்தின் அனுசரணையுடன் வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட தொகை 25,000.00ரூபாவாகும்.

**அமரர் கனகாம்பிகை பேரம்பலம் ஞாபகார்த்த உதவித் திட்டம்.**

க.பொ.த.சாதாரண தர மாணவர்கள் இருவருக்கு க.பொத. உயர்தரம் கற்கும் வரைக்குமான உதவித் திட்டம் அமரர் கனகாம்பிகை பேரம்பலம் அவர்களது ஞாபகார்த்தமாக எமது உறுப்பினரும் அன்னாரது பேத்தியுமாகிய திருமதி சத்தியராணி மகேஸ்வரன் அவர்களது அனுசரணையுடன் தொடக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு இவர் 65,450.00ரூபாவினை உதவியிருந்தார்.

கல்லூரியின் வடக்கு வளாகத்தில் பிரதான வீதியோடு அமைந்துள்ள எல்லை வேலி உறுப்பினர் கனக சிவகுமாரன் அவர்களது உதவியுடன் அமைக்கப்பட்டது. உதவிய தொகை 18,650.00 ரூபாவாகும்.

1949ஆம் ஆண்டு முதலாக வெளிவந்திருந்த கல்லூரியின் "சயம்பு" சஞ்சிகையின் மூலப் பிரதிகள் தேடிச் சேகரிக்கப்பட்டு அதன் பிரதிகள் தயாரிக்கப்பட்டு கல்லூரியின் நூலகத்திற்கும் காரை.அபிவிருத்திச் சபையின் மாணவர் நூலகத்திற்கும் வழங்கப்பட்டன. இந்தப் பணியினை பொறுப்பேற்று நிறைவேற்றி உதவிய ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.எஸ்.கே.சதாசிவம் அவர்களிற்கு எமது உளமார்ந்த நன்றிகள். இதற்கு ஏற்பட்ட செலவு 36,530.00

அர்ப்பணிப்பும் ஆற்றலும் மிக்க சிறந்த ஆசிரியையாக கல்வித்திணைக்களத்தால் தெரிவுசெய்யப்பட்டு மாகாண மட்ட சாதனையாளர் விருது பெற்ற வணிகமும் கணக்கீடும் ஆசிரியையான திருமதி தயாளினி ஜெயகுமார் அவர்களிற்கு வெகுமதி வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது.

அலுவலக உதவியாளருக்கான மாதாந்தக் கொடுப்பனவு 10,000.00ரூபாவிலிருந்து 18,000.00ரூபாவாக அதிகரித்து வழங்கப்பட்டது. இத்தொகையில் 3000.00ரூபாவினை எமது நிர்வாக சபை உறுப்பினரான திருமதி சுந்தரேஸ்வரி சச்சிதானந்தன் பொறுப்பேற்றிருந்து ஒரு ஆண்டிற்கான கொடுப்பனவுத் தொகையாக 36000.00ரூபாவினை உதவியிருந்தார். இவ்வாண்டில் உதவப்பட்ட மொத்தத் தொகை 168,000.00ரூபாவாகும்.

தனியார் கல்வி நிறுவன ஆசிரியரான அமரர் சி.குமாரவேலு ஞாபகார்த்தமாக க.பொ.த.சாதாரண தரப்

பரீட்சையில் சிறப்புச் சித்தி பெறுவோருக்கு ஊக்குவிப்புப் பரிசு வழங்குவதற்கான உதவித் திட்டம் தொடக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவினை உதவி அனுசரணை வழங்கிய தொழிலதிபர் மகாதேவன் பாலசுப்பிரமணியம் அவர்கள் கல்லூரிக்குச் சமூகமளித்து திட்டத்தினை தொடக்கி வைத்திருந்தார்.

தேசிய மட்ட தமிழ் இசைப் போட்டியில் 3வது இடத்தைப் பெற்ற செல்வி அமிர்தா ஆனந்தராசா **அமரர் திருவேங்கடம் சரஸ்வதி ஞாபகார்த்தமாக ரொக்கப் பரிசில்** வழங்கி கௌரவிக்கப்பட்டார். இதன் பொருட்டு அமரரர் திருவேங்கடம் குடும்பத்தினர் 10,000.00 ரூபாவினை உதவியிருந்தனர்.

கல்லூரிக்கான உதவிகளின் பயன்பாடு அவற்றின் செயற்பாடு தொடர்பிலும் கல்லூரி சார்ந்த செய்திகளை வழங்குவது தொடர்பிலும் எமக்கு சிறந்த ஒத்துழைப்பினை வழங்கி உதவிய கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி சிவந்தினி வாகீசன், கல்லூரியின் தற்போதய அதிபர் திரு.அ.ஜெகதீஸ்வரன் ஆகியோருக்கும் தாய்ச் சங்கத்தின் நிர்வாகத்திற்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளோம்.

இக்காலப்பகுதியில் இணையவழி ஊடாக நடைபெற்று வந்த நிர்வாக சபைக் கூட்டங்களில் தவறாது கலந்துகொண்டு தமது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பகிர்ந்து உதவியதுடன் அனைத்துப் பணிகளிலும் அர்ப்பணிப்புடன் உழைத்த உறுப்பினர்கள், போசகர் சிவநெறிச்செல்வர் தி.விசுவலிங்கம், கணக்காய்வாளர் திரு.மு.வேலாயுதபிள்ளை ஆகியோருக்கும் செயலாளர் என்ற வகையில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

“உனக்கு நீயே உண்மையாய் இரு” என்கின்ற தாரக மந்திரமான கல்லூரியின் மகுட வாசகத்தினை அடியொற்றி தளர்விலா அக்கறையோடு வீறுநடைபோட்டு வருகின்ற பழைய மாணவர் சங்கத்தின் கனடாக் கிளை குறிப்பிட்ட காலப்பகுதிக்கான பணிகளை நிறைவு செய்வதற்கு பேராதரவு வழங்கிய உறுப்பினர்கள், அனுசரணையாளர்கள், நலன் விரும்பிகள் அனைவரதும் கல்லூரி மீதான விசுவாச உணர்வினைப் பாராட்டி அவர்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளை மீண்டும் சமர்ப்பித்து இவ்வறிக்கையினை நிறைவுசெய்கின்றோம்.

“தாய் மலரடி பணிவோம் நம் கல்லூரி

தமிழெனு மமுதினை பருகிட நிலைகொண்ட (தாய்)

கனக சிவகுமாரன்

செயலாளர்